21.01.2020. C.C.No.122/2008

அ.சா.1 திரு.சண்முகசுந்தரம், த/பெ.இராமானுஜம் பிள்ளை

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

எனது அதிகார வரம்பிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களில் முறைகேடு நடந்தால் நான் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ள எனக்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். நான் ஆவணங்களை முறையாக பார்வையிடாமல் பொய்யான முறைகேடுகளின் அடிப்படையில் தான் தவறுதலாக ஆணை பிறப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

21.01.2020. C.C.No.122/2008

அ.சா.2 திரு.மாணிக்கம், த/பெ.பிச்சைமுத்து

1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

சங்கங்களில் தலைவர் இல்லாத பட்சத்தில் தனி அலுவலர் தான் பொறுப்பு வகிப்பார் என்றால் சரிதான். தலைவர் இல்லாத சமயத்தில் தனி அலுவலரின் கட்டுப்பாட்டில் தான் சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றால் சரிதான். அந்த சமயத்தில் அன்றாட வரவு செலவுகளை நாங்கள் பார்த்து கையொப்பம் செய்யவேண்டும் என்றால் சரிதான். விடுமுறை நாளில் தனி அலுவலரிடம் செயலாளர் கையொப்பம் பெற வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. சங்கங்களில் ஏதேனும் முறைகேடுகள் நடந்தால் அது சம்மந்தமாக உடனடியாக மேல் அதிகாரிகளுக்கு தனி அலுவலர் புகார் அளிக்க வேண்டும் என்றால் சரிதான். நான் எதுவும் தனிப்பட்ட முறையில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. 1 வது எதிரியின் மீது எந்தவித முறைகேடுகளிலும் ஈடுபடாத காரணத்தினால் தான் நான் அவர் மீது புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. கடன் வழங்கினாலும், கடன் திருப்ப அடைக்கப்பட்டாலும் செயலாளர் உரிய ஆவணங்களில் அதனை பதிவு செய்து என்னுடைய பார்வைக்கு வைப்பார் என்றால் சரிதான். அதில் நான் மேலோப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு சங்கத்தில் முறைகேடு நடந்திருந்தால் நானும் அதில் கூட்டு பொறுப்பாவேன் என்றால் சரியல்ல. சங்கத்தில் நடந்த முறைகேடுகளுக்கு நான் பொறுப்பாவேன் என்றால் சரியல்ல. எதிரியாக இருக்கவேண்டிய நான் சாட்சியாக இருக்கிறேன் என்றால் சரியல்ல.

2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

வரவு செலவு கணக்குகளில் சிற்றெழுத்தருக்கு எந்தவித பொறுப்பும் கிடையாது என்றால் சரிதான். 2 வது எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

21.01.2020. C.C.No.122/2008

அ.சா.4 திருமதி.சேமலா, க/பெ.துரைராஜ்

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

எனக்கு தற்போது 34 வயதாகிறது. எனது தகப்பனார் உயிரோடு இருக்கிறா என்றால் இருக்கிறார். அவருக்கு வாய் பேச முடியாது. கை செயல்படவில்லை. எனது தகப்பனார் மேற்படி சங்கத்தில் கடன் பெற்றிருந்தார் என்றால் சரியல்ல. அவர் வந்து சாட்சியளித்தால் கடன் பெற்றிருந்த விபரம் தெரியவந்துவிடும் என்பதால் அவருக்கு பதிலாக நான் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கடன் பெற்றது வெளியே தெரிந்தால் திரும்ப செலுத்தியாக வேண்டும் என்பதாலும் அதிகாரிகள் என்னை கட்ட சொல்லிவிடுவார்கள் என்பதாலும் நான் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கமுடியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

21.01.2020. C.C.No.122/2008

அ.சா.6 திருமதி.காந்தி, க/பெ.செல்லத்துரை

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் உரிய ஆவணங்களை கொடுத்து மேற்படி சங்கத்தில் கடன் பெற்றுவிட்டு தற்போது கடன் வாங்கவில்லை என்று பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

21.01.2020. C.C.No.122/2008
அ.சா.7 திருமதி.வேலம்மாள், க/பெ.துரைச்சாமி
எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் உரிய ஆவணங்களை கொடுத்து மேற்படி சங்கத்தில் கடன் பெற்றுவிட்டு தற்போது கடன் வாங்கவில்லை என்று பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

21.01.2020. C.C.No.122/2008

அ.சா.8 திருமதி.காளியம்மாள், க/பெ.சுந்தராசு

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் உரிய ஆவணங்களை கொடுத்து மேற்படி சங்கத்தில் கடன் பெற்றுவிட்டு தற்போது கடன் வாங்கவில்லை என்று பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.